நடைபெற இருப்பதாலும் இந்தக் கடுமையான போட்டித் தேர்வின் மூலம் மிகத்தரமுள்ளவர்களும், கட்டுப்பாடு உள்ளவர்களுமான ஊழியர்களை அரசுப் பணிக்குத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு உள்ளது. அடிக்கடி தற்காலிகப் பணியாளர்களை அரசுப் பணியில் இருந்தமைக்காகவும் இரக்கம் காரணமாகவும் நிரந்தரப்படுத்துவதென்பது முறையான செயலாகாது என்பதால், தற்போது குறிப்பிடப்படுள்ளவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதற்கில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 10–00)

(11) தமிழகத்தின் பல பகுதிகளில் நிலவும் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. சுப்பராயன், ச. கோவிந்தசாமி, சி. பழனிமுத்து, என். எஸ். வி. சித்தன், பி. கே. எம். முத்துராமலிங்கம், இரா. தாமரைக்கனி, ப. தீர்த்தராமன், க. சோலைராசு, ஆ. நடராசன், கு. ரமணி, கோ. வீரய்யன், வி. பி. சிந்தன், ப. ந. இராமச்சந்திரன், மு. மாரிமுத்து, ச. பாலகிருஷ்ணன், மா. சுந்தரதாஸ், ஆர். ரெங்கசாமி, த. புஷ்பராசு, டாக்டர் க. நல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு முழுவதும் நிலவிடும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையினால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் படும் இன்னல்கள், அதனைப் போக்கிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பருவ மழை பொய்த்ததின் காரணமாக சில மாவட்டங்களில் பாதக பருவ நிலை நிலவி வருவதாக மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. முதல் கட்டமாக மதுரை, அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், பெரியார் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் குடிநீர்ப் பணிகளுக்கென 10–3–1986 அன்று ரூ. 40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களுக்கு மேற்கொண்டு நிதி

கவன ஈர்ப்புகள்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

உதவி கோரியும், மற்றும் பாதிக்கப்பட்டுள்ள இதர மாவட்டங்களுக்கு நிதி உதவி கோரியும் வந்துள்ள சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் செயற் குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகின்றன.

மேலும், சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பின், வருவாய்த் துறை அலுவலர்களால் நேரடி ஆய்வு செய்யப்பட்டபின் தகுதியுள்ள நிலங்களுக்கு முறைப்படி நிலவரி ரத்து செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அது முழுமையாக வைக்கப்படவில்லை. அதற்குப் பிறகு, பல்வேறு கருத்துக்களை வருவாய்த்துறை மானியக் கோரிக்கைக்கு பதிலளிக்கும்போதே சொன்னேன். அதற்குப் பிறகும் சொன்னேன். அதற்குப் பிறகு தலைமைச் செயலாளர் மூலமாக கூட்டப்பட்ட கூட்டத்திலேயும், பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலும் ரூ. 14 கோடிக்கு மேல் இந்தக் குடிநீர் வழங்குவதற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, ஆழ்துளைக் கிணறுகளை புதியதாக உருவாக்குவது, ஏற்கெனவே இருக்கின்ற ஆழ்துளைக் கிணறுகளை பழுதுபார்த்தது, செம்மைப்படுத்துவது, குடிநீர் இல்லாத இடங்களில் லாரிகளின் மூலமாக கொண்டுவருவது போன்ற முறைகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த மாவட்டத்தினுடைய தேவைக்கேற்ப அமையும் என்பதை குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இன்றைக்கு சற்றேறக்குறைய 42 தீர்மானங்களுக்கு அருள்கூர்ந்து அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஆகவே, நேரத்தைக் குறைத்துவிடாமல், கொஞ்சம் என்னைப் பேச அனுமதியுங்கள். ஆக இன்றைக்கு தமிழகம் முழுவதிலுமுள்ள பிரச்சினை, இந்த வறட்சிப் பிரச்சினை. இப்படிப்பட்ட ஒரு அறிக்கையை வைக்க நம்முடைய அரசுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே இதிலே இல்லாத சில விவரங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். தமிழகம் முழுவதும் உள்ள வறட்சியைத்தான் சொல்லியிருக்கிறோம். ஆனால், நான்கு மாவட்டங்களைப் பற்றிய விவரங்கள் தான் இதில் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், புதுக்கோட்டை மாவட்டம், சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம், இன்னும் பல்வேறு மாவட்டங்களைப் பற்றிய எந்தவிதமான குறிப்பும் இதில் இல்லை. ரூ. 40 இலட்சத்திற்கான விவரங்கள் தான் இதில் இருக்கின்றன. நம்

கவன ஈர்ப்புகள்

(திரு. என். எஸ். வி. சித்தன்)

முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரூ. 10 கோடி என்று சொன்னார்கள். ஏன் அந்த விவரத்தையும் இதிலே சேர்த்துப்போட்டிருக்கலாம் அல்லவா ? நான் இந்த அவை ஆரம்பித்த காலத்திலிருந்தே, அதாவது ஜனவரி மாதத்திலிருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறேன். நிலைமை கடுமையாக இருக்கின்றது. வருகின்ற மாதங்களில் இன்னும் மோசமாக இருக்குமென்று . . . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே விவாதிக்கப்பட்டாகிவிட்டது. நீங்கள் அமைச்சரின் கவனத்தை ஏற்கெனவே ஈர்த்து விட்டீர்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், '' மாவட்டங்களுக்கு மேற்கொண்டு நிதி உதவி கோரியும், மற்றும் பாதிக்கப்பட்டுள்ள இதர மாவட்டங்களுக்கு நிதி உதவி கோரியும் வந்துள்ள சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் செயற்குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. மேலும் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பின், வருவாய்த்துறை அலுவலர்களால் நேரடி ஆய்வு செய்யப்பட்டபின் தகுதியுள்ள நிலங்களுக்கு முறைப்படி நிலவரி ரத்து செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் '' என்று போட்டிருக்கிறது.

நான் கேட்கிறேன். இந்தப் பசலை அடுத்த மாதத்தோடு முடியப் போகிறது. நீங்கள் எப்போது பரிசீலனை செய்து, எப்போது அறிவித்து, எப்போது விசாரணை நடத்தப்போகிறீர்கள் ? வறட்சி என்று அறிவித்தால் தானே அவர்களுக்குக் கடன் வசதிகள் ஒத்திவைக்கப்பட முடியும் ? நான் அதைத்தானே மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறேன். எனவே, நீங்கள் விரைவாக அறிவிக்க வேண்டும். இதிலே பெரிய விவசாயிகளுக்காகவும், வசதி படைத்த விவசாயிகளுக்காகவும் நான் வாதாடவில்லை. இது மிக முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னபடி, இந்தப் பசலைக்குள்ளாகவே அவர்கள் கூறுகின்ற அந்த கோரிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்து வருகிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. அதற்கான முயற்சிகளை எடுத்து, எந்தெந்த சலுகைகளை எந்தெந்த அளவிலே ஆங்காங்கே வெளியிட வேண்டுமோ, அவ்வாறு வெளியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று காலைப் பத்திரிகையில் மதுரை மாவட்டத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு மாவட்-

கவன ஈர்ப்புகள்
(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

டங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பசலைக்குள்ளாக எடுக்கவேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பின ருடைய கோரிக்கை. இது நிறைவேற்றப்படும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே சொன் னேன். ஓர் உறுப்பினர் தான் கேள்வி கேட்கலாம் என்று. அனைவரும் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) முறைப்படி எப்போதும் 2 கவன ஈர்ப்புகளுக்கு மேல் எடுப்பது இல்லை. இன்றைக்கு 42 எடுக்க இருக்கிறோம். (குறுக்கீடு).

12. குற்றாலம் மலைப் பகுதியில் பன்றிகளால் விவசாய நிலத்திற்கு ஏற்படும் சேதம்.

திரு. டி. ஆர். வெங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குற்றாலம் மலைப் பகுதியிலிருந்து, காட்டுப் பன்றிகள் இறங்கி குற்றாலம் புளியரை, வடகரைப் பகுதிகளிலுள்ள நெற்பயிருக்கு விளைக்கும் சேதம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு மிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டத்தில் காடுகளை ஒட்டியுள்ள நிலங் களில் உள்ள பயிர்களைக் காட்டுப் பன்றிகள் அழித்து வரு கின்றன என்றும், 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்கினங்களில் காட் டுப்பன்றிகளும் சேர்க்கப்பட்டுள்ளதால் இவற்றை விவசாயிகள் வேட்டையாடவோ, சுட்டுக் கொல்வதற்கோ முடியவில்லை, என்றும், ஆகவே மேற்கூறிய சட்டத்தின் பட்டியல்கள் III மற்றும் IV ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள இவ்விலங்கை அப் பட்டியல்களிலிருந்து நீக்கி விட்டால் விவசாயிகள் காட்டுப் பன்றிகளை வேட்டையாடி அல்லது கொன்று தங்கள் பயிர் களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதால் காட்டுப் பன்றியை வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் பட்டியல் களிலிருந்து நீக்குமாறு அரசுக்கு வேண்டுகோள் வந்தது. இந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டு, காட்டுப் பன்றிகளை மேற்படி சட்டத்தின் பட்டியல்கள் III மற்றும் IV இல் இருந்து பட்டியல்